தரம் 4

நிறுத்தக்குறிகள்

- (.) முற்றுப்புள்ளி
- (,) காற்புள்ளி
- (?) வினாக்குறி
- (!) வியப்புக்குறி

www.lkedu.lk

வியப்புக்குறி

வியப்பு,மகிழ்ச்சி ,அதிர்ச்சி , வெறுப்பு, இரக்கம் போன்ற உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தப் பயன்படுகிறது.

1. எவ்வளவு பெரிய மலை!
2. நாம் எதிர்பார்த்தபடியே கலைவிழா நன்றாக நடந்து முடிந்தது!
3. அவன் விமான விபத்தில் இறந்துவிட்டான்!
4. பொருளாதார தேக்கம் காரணமாக அவனது வேலை போய்விடுமே!

www.ikedu.lk

முற்றுப்புள்ளி

1. தம்பியும் தங்கையும் கடைக்குப் போனார்கள்.
2. கண்களில் இருந்து கண்ணீர் கசிந்தது.
3. நிலத்தில் இறங்கி மண்வெட்டி பிடித்துக் கொத்தினான்.
4. மாணவர்கள் பாடசாலைக்குச் சென்று பாடம் படித்தனர்.

www.iredu.lk

வினாக்குறி

1. நேற்று மழை பெய்ததா?
2. உமது பெயர் என்ன?
3. எது வாழ்க்கை?
4. பௌர்ணமியா ? அமாவாசையா?
5. வாழ்க்கையின் அர்த்தம் என்ன?

www.ikedu.lk

காற்புள்ளி

1. மா, பலா, வாழை என்பன முக்கனிகள் ஆகும்.
2. ஆடு , மாடு, யானை என்பன தாவரஉண்ணிகள் ஆகும்.
3. அம்மா, புதுப்பானையில் பாலை இட்டுப் பொங்க வைப்பார்.
4. பழம், பாக்கு, வெற்றிலை,கரும்பு, இளநீர் என்பவற்றுடன் பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து வழிபடுவோம்.

www.ikedu.lk

மரவளர்ப்பு பற்றிய விழிப்புணர்வு பெருகி வரும் நேரம் இது. மரங்கள் மனித குலத்துக்குச் செய்துவரும் நன்மைகள் கணக்கில் அடங்காதவை. மரங்கள் நிறைந்த காடுகள் மழைப்பொழிவு வினை உண்டாக்கும். அசுத்த வாயுவான கரியமில வாயுவை தாம் உட்கொண்டு மனிதர்களுக்குத் தேவையான ஒட்சிசனை மரங்கள் வெளியிடுகின்றன. சாலை ஓரங்களில் நிற்கும் மரங்கள் நிழல் கொடுத்துப் பயணத்தை இனிமையாக்குகின்றன.

நண்பர்களுக்கு மரக் கன்றுகளைப் பரிசளிப்போம்! பள்ளியில் ஒவ்வொருவரும் ஒரு மரக்கன்றை நட்டுப் பேணிப் பாதுகாப்போம்!

மரம் நடுவோம்!
மகிழ்ந்திருப்போம்!

உணவாகும் பல காய்களையும் கனிகளையும் மரங்கள் அள்ளித் தருகின்றன. வனவிலங்குகள் வாழும் இடங்களாக விளங்குபவை அடர்ந்த மரங்கள் சூழ்ந்த காடுகளே!
நம் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் பலவும் தருவது மரங்களே! இரப்பர், மூலிகைகள், வீட்டுக் கட்டுமானப் பொருட்கள் போன்றவற்றை மரங்கள் தருகின்றன. பறவைகள் கூடுகட்டி வாழ்வதற்கு வாடகை வாங்காமல் இடம் தந்து உதவுகின்றன. மரங்களின் பட்டைகள், இலைகள், வேர்கள் எனப் பலவும் மருந்துப் பொருட்களாகவும் பயனாகின்றன. எனவே வீட்டுக்கு ஒரு மரம் வளர்ப்போம்! நம் எதிர்கால சந்ததியினரின் நன்மையைக் கருதி மர வளர்ப்பில் ஈடுபடுவோம்!

www.ikeau.lk

பயிற்சி வினாக்கள்

1. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவிபுரிகின்றன
2. அவர் தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே
3. அந்தப்பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன
4. நாட்டின் அழகு என்னே
5. நீ பல்லாண்டு காலம் வாழ்வாயாக

www.ikou.lk

6. பாலிலிருந்து தயிர் மோர் வெண்ணெய் நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்
7. நாளை வரமுடியாதா
8. வரைந்தனுப்பிய சித்திரம் கொள்ளை அழகு
9. நன்றாகப் படிக்கின்றாயா
10. பொலித்தீன் பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

www.lkedu.lk

1. மனிதனுக்குப் பல விலங்குகள் உதவிபுரிகின்றன.
2. அவர்தம் கல்வியின் சிறப்புத்தான் என்னே!
3. அந்தப்பாறையில் குரங்கு,மான், சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன.
4. நாட்டின் அழகு என்னே!
5. நீ பல்லாண்டு காலம் வாழ்வாயாக!

www.lkedu.lk

6. பாலிலிருந்து தயிர் , மோர் , வெண்ணெய் , நெய் முதலியவற்றைப் பெறுகின்றோம்.
7. நாளை வரமுடியாதா?
8. வரைந்தனுப்பிய சித்திரம் கொள்ளை அழகு!
9. நன்றாகப் படிக்கின்றாயா?
10. பொலித்தீன் , பிளாஸ்திக் பொருட்களை கண்ட இடங்களில் வீசுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

www.ikedu.lk